Registered as a Newspaper

88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு தில்லைநாதன்
PHYSICAL CHEMISTRY
(அவத்தைச் சமநிலை)
ஆரம்பம்: 05-03-88
Sat. 07 15 08 15
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

89 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு. தில்லைநாதன்
(Sat. Sun)
9 30 - 11 30
அசேதன இரசாயனம்
12 30 - பிணைப்புகள்
ஆரம்பம்:
05-03-1988 Sat.
New Master
Institute
B M C LANE, JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ பங்குனி மீ 03 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 26 (16 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:29

# காமினி டில்லிக்கு திடீர் விஜயம்!

## ராஜீவுடன் முக்கிய பேச்சுக்கு

கொழும்பு, மார்ச் 16

காணி அபிவிருத்தி. மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா, நேற்றுப் புதுடில்லிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் சம்பந்தமாக, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் சில முக்கிய பேச்சுக்களை நடத்தவே அவர் புதுடில்லி விரைந்தார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விசேட பிரதிநிதியாகவே அவர் சென்றுள்ளார்.

அமைச்சருடன் கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவும், இராணுவத் தளபதி நளின் செனவிரத்னவும் புதுடில்லி சென்றனர்.

இலங்கை நிலைமை பற்றி கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் டிக்ஸிற் பிரதமர் காந்திக்கு எடுத்துரைத்த பின்னர், அமைச்சர் காமினி திஸநாயக்கா திடீரென்று புதுடில்லி செல்வது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

திரு டிக்ஸிற் கடந்த 10 தினங்களாக புதுடில்லியில் தங்கி இருக்கிறார்.

அவர் சென்ற வார இறுதியில் கொழும்பு திரும்புவதாக இருந்தது பின்னர் அது ஒத்திப் போடப்பட்டது.

திரு. திஸநாயக்கா புதுடில்லியில் தங்கி நிற்கும் போது பாதுகாப்பு அமைச்சர் பந்த், இணை அமைச்சர் நட்வர்சிங் ஆகியோருடனும் பேச்சுக்கள் நடத்துவார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா நேற்று மாலை புதுடில்லி போய்ச் சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவரை, இணை அமைச்சர் நட்வர்சிங் வரவேற்றார்.

திரு. திஸநாயக்கா தலைமையில் 11 பேர் கொண்ட தூதுக்குழுவும் புதுடில்லி சென்றடைந்தது.

இன்று புதன்கிழமை அமைச்சர் காமினி திஸநாயக்கா பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்திப்பார்.

இதற்கிடையில் திரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## முரசுமோட்டையில் வாந்திபேதி; இருவர் மரணம்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள முரசுமோட்டை என்னுமிடத்தில் சுமார் 25 பேர் வரை வாந்திபேதிக்கு ஆளாகியுள்ளதாகவும் இருவர் இதனால் மரணமானதாகவும் தெரிய வந்துள்ளது.

வாந்திபேதியால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் வைத்தியசாலை எடுத்துவரப்படாமலேயே இறந்துவிட்டார். மற்றொருவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மரணமானார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி சுகாதார வைத்தியஅதிகாரி அலுவலகத்தைச்சேர்ந்தகுடும்பநல உத்தியோகத்தர்கள் சுகாதாரப் பரிசோதகர்கள் இக்கிராமத்திற்கு விரைந்து சுகாதாரப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவுப் பகுதிகளிலும் வாந்திபேதி வெகு வேகமாக பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ 76-10)

## முச்சந்தி முரளி



தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் இப்ப எருமை மாட்டிலை பெய்த மழையின்ரை நிலையாய்ப் போச்சுது பாருங்கோவேன் ...!

## சுபநேரம்

16-03-1988
பங்குனி 3
புதன்கிழமை
சுபநேரம்:
4-50 முதல் 6-20 வரை
ராகுகாலம்:
12-20முதல் 1-50 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வட்டக்கச்சிக்கு ஹெலி மூலம் இராணுவம்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சியிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் வட்டக்கச்சிக்கு கொண்டு செல்லப்பட்ட அமைதிப்படை அங்கு பல இடங்களிலும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அதையடுத்து வட்டக்கச்சியிலுள்ள காட்டுப் பகுதிகளில் ஒரே ஷெல் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டதாகக் கூறப்பட்டது. இதனால் இப்பகுதி மக்கள் பலத்த பீதி அடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் வட்டக்கச்சியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மூவரில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

(ஓ-76)

## 'பாஸ்' கைமாறினால் மோட்டார் சைக்கிள் பறிமுதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 16

மோட்டார் சைக்கிள் 'பாஸ்' கைமாற்றம் செய்யப்படின் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்படும் என அறியவருகிறது.

தற்பொழுது ஸி 50 முதல் 125 ஸி ஸி வரையிலான மோட்டார் சைக்கிள்களுக்கும் பாஸ் வழங்கப்பட்டுள்ள போதிலும் உரியவரின் பதிலில் மற்றொருவர் மோட்டார் சைக்கிள் ஓடுவது குற்றமாகும் அப்படி மீறி ஓடுவது கண்டுபிடிக்கப்பட்டால் மோட்டார் சைக்கிள் பறிமுதல்செய்யப்படும் எனத் தெரிய வருகிறது.

[ஓ-10]

## தமிழ்க் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதம் நாளை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 16

வெலிக்கடை, மகஸின் சிறையில் உள்ள தமிழ் அரசியற் கைதிகள் நாளை 17 ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க உள்ளனர்.

சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளை 17ஆம் திகதிக்கு (நாளை) முன்னர் விடுவிக்காவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இவர்கள் ஏற்கனவே கடந்த மாதம் 17 ஆம் திகதி நடத்திய அடையாள உண்ணாவிரதம் பலன் அளிக்கவில்லை.

அதைத் தொடர்ந்து பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் தமிழ் அரசியற் கைதிகள் சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர்.

நாளைமுதல் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதிக்கின்றனர்.

(ஓ 21)

## ஜீ. சீ. ஈ. பரீட்சையை நடத்தக்கோரி மாணவர் கையெழுத்து இயக்கம்

யாழ்ப்பாணம், மார்ச்16

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சீ. ஈ சாதாரண தரப்பரீட்சையை நடத்துமாறு கோரி மாணவர் இளைஞர் பொதுமன்றம் பாடசாலைகளில் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

நேற்று சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

இந்த வாரத்தில் வட பகுதியில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும்.

தடைப்பட்ட ஜீ சீ ஈ. சாதாரணதரப் பரீட்சையைஉடனடியாக நடத்தக்கோரி சேகரிக்கப்படும் கையொப்பங்களும் மகஜர்களும் மாணவர் இளைஞர் பொதுமன்றத்தினால் கல்வி அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் இந்தியத் தூதுவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

(இ)

## யாழ்ப்பாண நகரப் பகுதி நேற்று வெறிச்சோடி, ஸ்தம்பிதம்

— அலுவலகச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாண நகரம் நேற்றைய தினம் வெறிச்சோடி ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது.

நேற்றைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று பரவலாகப் பேசப்பட்டதைத் தொடர்ந்தே நகரம் வெறிச்சோடியது.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் பெருமளவில் மூடப்பட்டிருந்தன

காலையில் திறந்திருந்த ஒரு சில வியாபார நிலையங்களும் பகல் பத்து மணியளவில் இழுத்து மூடப்பட்டன.

ஒரிரு மருந்து விற்பனை நிலையங்கள் மட்டும் திறக்கப்பட்டிருந்தன.

பல பாடசாலைகளுக்கு மாணவர்கள் மிகமிகக் குறைவாகவே வந்திருந்தனர்.

ஏனைய பாடசாலைகளுக்கு மாணவர்கள் ஓரளவு வந்திருந்தபோதிலும், அவையும் பத்து மணியுடன் மூடப்பட்டன.

அலுவலகங்களுக்கும் மிகக் குறைந்தளவு ஊழியர்களே வந்திருந்தனர்

எனினும் அலுவலகங்களும் நண்பகலுடன் மூடப்பட்டன.

யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயா

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்கக்கோரி மகஜர்

கொழும்பு, மார்ச் 16

பூஸா மற்றும் சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுவிக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, பிரதமர் ராஜீவ் காந்தி. இந்தியத் தூதர் டிக்ஸிற் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திருமலை மாணவர்கள் இவ்வேண்டுகோள்அடங்கிய மகஜரை நேற்று திருகோணமலையில் இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

(ஓ-எ)

## கடைகளைத் திறக்கக் கோருகிறது அமைதிப்படை

கடைகளைத் திறக்குமாறு இந்திய அமைதி காக்கும் படையினர் சகல வர்த்தகர்களுக்கும் கடை உரிமையாளர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடைகள், வர்த்தக நிலையங்களைத் திறக்கும் அனைவருக்கும் இயன்ற அளவு பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் இந்திய அமைதி காக்கும் படையினர் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்தனர்.

பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படா

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைப் பகுதியில் வன்செயல்கள் அதிகரிப்பு!

### தமிழர், சிங்களவர் மாறி மாறிக் கொலை

கொழும்பு, மார்ச் 16

திருகோணமலைப் பகுதியில் வன்செயல்கள் அதிகரித்துவருகின்றன. தமிழர்களும் சிங்களவர்களும் மாறி மாறிக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இம்மாத ஆரம்பத்திலிருந்து விட்டு விட்டுத் திருமலைப் பகுதியில் வன்செயல்கள் நடந்து வருகின்றன. கடந்த சில தினங்களாக நிலைமை மோசமடைந்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நேற்று

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று மட்டும் 13 தமிழரும், ஏழு சிங்களவரும் கொல்லப்பட்டனர்.

தம்பலகாமத்தில் இருந்து சென்ற பஸ்ஸில் இருந்து 13 தமிழ்ப் பயணிகள் வெளியே இழுத்தெடுக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பழிவாங்கும் நடவடிக்கையாக சிங்களத் தீவிரவாதிகள் இச்செயலைப் புரிந்திருக்கலாம் என்று தெரிய வருகிறது.

இன்னொரு சம்பவத்தில் 6 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர். இதுவும் ஒரு பழிவாங்கல் நடவடிக்கையாக இருக்கலாம என்று தெரிவிக்கப்பட்டது

இதனிடையில் கடற்படை அதிகாரி ஒருவர் இனந்தெரியாதவர்களினால் திருமலையில் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகின்றது

(ஓ-எ)

### விடுதலை

மட்டக்களப்பு, மார்ச்16

இந்திய அமைதிப்படை முகாமில் கடந்த மூன்று மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. வே. க. பிரகாசா விடுதலையானார் (ஓ-21)

## ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 16

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெறவில்லை.

யாழ். நகரில் நேற்று நடைபெற்ற திடீர் ஹர்த்தால் காரணமாகவே இந்த ஆட்டம் நிறுத்தப்பட்டது

இந்த ஆட்டத்தை தொடர்ந்து ஆடுவதா மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே ஆடுவதா என்பது பற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

(ஓ 7)

## ● அவர்கள் யார் என்பது தெரியுமாம்!

கொழும்பு, மார்ச் 16

ஐ. தே. க. தலைவர் ஹர்ஷா அபயவர்த்தன, பொலீஸ் அதிபர் டெரன்ஸ் பெரேரா, விஜய குமாரணதுங்கா ஆகியோரைக் கொலை செய்தவர்கள் யார் என்பது எமக்குத் தெரியும்— இப்படி கொழும்பு புலனாய்வு பிரிவு நேற்று அறிவித்தது.

ஒரே ஒரு ரி 56 ரைபிளே இக்கொலைகளுக்குப் பயன் படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஓ-எ)

## நகரில் பதற்றம்; கடைகள் மூடப்பட்டன

கொழும்பு, மார்ச் 16

அனுராதபுர மாவட்டத்தில் பஸ்ஸில் சென்ற தமிழ்ப் பயணிகள் கொல்லப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக நேற்றுத் திருமலை நகரில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

நகரில் பதற்றம் நிலவினாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் திருகோணமலை நகரில் நேற்றுச் சிங்களவர் ஒருவர் இனந் தெரியாதவர்களினால் குத்திக்கொல்லப்பட்டார்.

(ஓ-எ)

## பஸ் சூட்டுச் சம்பவம்: பலியானோர் விவரம்

கொழும்பு, மார்ச் 16

அனுராதபுர மாவட்டத்தில கடந்த வெள்ளியன்று தனியார் பஸ்ஸில் சென்ற தமிழர், முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில உயிரிழந்த சிலரின் பெயர்கள் கிடைத்துள்ளன.

சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

இறந்தவர்களில் கடை

(6ஆம் பக்கம் பார்க்க)

அரிய சந்தர்ப்பம்!

A.A.T

(தமிழ் மூலம்)

O/L சித்தியடைந்த அனைவரும் இந்தப் பயிற்சி நெறியை மேற்கொண்டு-குறுகிய காலத்தில் கணக்காளராக மாறலாம்-சிறந்த விளக்கமான விரிவுரைகள்- அச்சிட்ட பாடக் குறிப்புகள் இலவசம்.

ஆரம்பம்: 20 - 3 - 88

உடன் நேரில் வரவும்:

S-T-C-A

(அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
37, சிவன் பண்ணை வீதி, கொட்டடி,
யாழ்பபாணம்.

(1959)

இளைய தலைமுறையின் இதயத்துடிப்பாகும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை புலோலிக் கிராமக் கோட்டடியில் வீடொட்டக் கூடிய நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. மருகபிரான், 'ராணி பவனம்' கிராமக்கோட்டடி, புலோலி. (2005)

சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கு Spoken English 40/- தமிழ் மூலம் சிங்களம் படிக்க நல்லதோர் புத்தகம் 20/- மலிவு விலையில் எண் ஜோதிடம், ''வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமாலஜி 6/50. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (1602)

நாவற்குழி சேரதீவு வீதியில் நாவற்குழிச் சந்தியில் இருந்து அரை மைல் (½ மைல்) தொலைவில் பிரதான வீதி (சேரதீவு வீதி) ஓரமாக ஒன்பது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திரு. கா அன்னலிங்கம், 'Brindavanam' நாவற்குழி, கைதடி. (2041)

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட 2×5 அடி இரட்டைக் கதவு குளிர் சாதனப் பெட்டி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஜவ்னு எலேக்ட்ரோ — பிளேட் ஸ், 7 கஸ்தூரியார் லேன் சுன்னாகட்டி-சிவன் கோவிலுக்குக் கிட்டியதூரம் (2045)

பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிரதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1950)

### வகுப்புகள்

Paper Classes 88 Aug இந்து நாகரிகம் - அருள் நங்கை கொருளி ல்- குமார வல் [ஏன் று] ஆரம்பம்: 16-03-88 புதன் பி. ப. 3 00 அளவையியலும் விஞ்ஞான முறையும் கேசவன். ஆரம்பம் 18 03-88 வெள்ளி பி ப 2 30 நிர்வாகி: கொயின்ஸ் இன்ஸ்ரியூட் நெல்லியடி

Radio T V Air Cnoditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna (1840)

### காணவில்லை

பஸ்ரியன் மார்சலின் யோசப் ஜெறட்ணம் என்னும் பெயருடைய கடவுச்சீட்டு [Pass Port] அதே பெயருடைய அடையாள அட்டை, கப்பேசோலை (Draft) Ticket என்பன அடங்கிய கைப்பை ஒன்று 05-03-88 இல் காணாமல் போய்விட்டது இதைக் கண்டெடுப்போர் உதயன் பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1958)

நல்லையா பாலமனோகரன் என்பவருடைய அடையாள அட்டை No. 633602859 v யாழ் சுன்னாகட்டிக்கும் நாவலர் ரோட்டுக்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (1941)

### தேவை

மேசன் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும்: 449, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (2056)

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி. வெள்ளவத்தை டுப்பிளிகேஷன் ரோட்டில் மூன்று அறைகளுடன் தனி வழிப் பாதையுடன் வீடு தேவை. தொடர்பு 118. ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி முன்) [1964]

### சேவை

ஆலோசனைச் சேவைகள்: உலோக வார்ப்பியல் சம்பந்தமான நிபுணத்துவ ஆலோசனைகள் பெற விரும்புவோர் தொடர்பு கொள்க C/பா உதயன் விளம்பர இல 91. விசாரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி திரு. கு. சந்தசாமி ''யோகலட்சுமி'' அராலி வடக்கு, வட்டுக்கோட்டை [1951]

யாழ். சைனீஸ் ரெஸ்ரோறன்ரின் (முதலாம் குறுக்குத்தெரு) தினசரி காலை 10 மணி தொடக்கம் மாலை 6 – 30 மணி வரை திறந்திருக்கும் சைனீஸ் ரோல்ஸ் புதன்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முன்கூட்டி ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். (1906)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவிகளுக்கான உணவும் தங்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும். சகல விதமான சிற்றுண்டி வகைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும் திருமதி B நிர்மலதேவி, 671, K K S ரோட் பூநாறி மரத்தடி யாழ்ப்பாணம் (2033

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudu Enterprises. 39 / 17. Power House Road, 3rd Lane, Jaffna (1803)

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணிநிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு; கிளின்-கட் இல:- 239. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

நிரந்தர வதிவிட விசா பெற்று விரைவில் அவுஸ்திரேலியா செல்ல விரும்பும் யாழ் இந்து வேளாள குல தீய பழக்கங்களற்ற 32 வயதுப் பட்டதாரிக்கு அவுஸ்திரேலியாவிலிருக்கும் பெற்றோர் சகோதரர்கள் அதே குலத்தைச் சேர்ந்த தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றனர் முழு விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 91, C/o உதயன் [1957]

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் காரியாலயம், ஸ்ரோர் ஆகியவற்றுக்குகந்தகட்டிடம் இரு பிரிவாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: நேசன் - ஹாஜி ஹாட்வெயர்ஸ், இல-3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [1912]

## 130 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் சுப்பையா நாகநாதர்**
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

மண்ணில்: 19- 12- 1907 — விண்ணில்: 08– 11– 1987

திருநெல்வேலி வடக்கைச்சேர்ந்த முன்னாள் தபால் அதிபரும், திருநெல்வேலி ஓய்வூதிய சங்கத் தலைவருமான திரு. சுப்பையா நாகநாதர் இறைபதம் எய்தி 130 நாட்கள் பூர்த்தியாகும் இத்தினத்தில் (16 - 03 - 88) அன்னாரை அன்புக் கண்ணீருடன் நினைவு கூர்ந்து அவரின் புனித ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. அன்னாரின் மறைவைக் கேள்வியுற்று சமுகமளித்தோர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பலாலி ரோட், திருநெல்வேலி வடக்கு. (2044)

## அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியமும்

**கதிர்காமர் சின்னையா**
தவப்பேறு: 04—06—1922
சிவப்பேறு: 16-02-1988

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை வடமேற்கை வதிவிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் பெரியகடை பிரபல வர்த்தகர் கதிர்காமர் சின்னையா அவர்கள் 16-2 88 சிவராத்திரி தினத்தன்று சிவனடி சேர்ந்தார். அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும். அருமைரத்தினம் (உரிமையாளர் ஸ்வர்ணம் பப்ளிசிர் றீஸ்) இராசேஸ்வரி, கபலேஸ்வரி, புஸ்பராணி, சச்சிதானந்தம், மனோரஞ்சிதம் ஆகியோரின் தகப்பனும், சரோஜினிதேவி, இராமலிங்கம், தனபாலசிங்கம், மாணிக்கவாசகர் ஆகியோரின் மாமனரும், அமரர் தங்கமுத்து அமரர் குருநாதர், திரு சின்னத்தம்பி, அமரர் தங்கம்மா, திருமதி நாகம்மா, திரு சுர்தையா (முன்னாள் அலுவலர் யா/போதனா வைத்தியசாலை) அமரர் கதிராசிப்பிள்ளை, திருமதி மரிமுத்து ஆகியோரின் சகோதரருமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17–2 88 அன்று கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது அன்னாரின் அந்தியேட்டி 16-03-88 இன்று கீரிமலையில் நடைபெற்று வீட்டு கிருத்தியம் 19-3-88 அன்று 30, புதுவீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுவதோடு இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்

இல 30, புதுவீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(1960)

## இரண்டாம் நினைவஞ்சலி



**அமரர் சதாசிவம் சுந்தரம்**
பிறப்பு: 12 04 1896 இறப்பு: 16-03-1986

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய் எம் அனைவரின் நெஞ்சங்களில் நீங்காமல் வாழ்ந்திருக்கும் எம் அன்புத் தெய்வமே! இரண்டு ஆண்டுகளுக்கு எம்மை ஆழ்துயரில் ஆழ்த்தி விட்டுப் பிரிந்தாலும் தங்களது அன்பான பேச்சும், பண்பான செயல்களும் என்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காது. உங்களது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இருபாலை, கோப்பாய். (1946)

## நினைவஞ்சலிக் கூட்டம்

காலஞ்சென்ற பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறும்.

கூட்டம் கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். கல்வியியற்புலத்தலைவர் ப. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல கல்விமான்கள் உரையாற்றுவர்

அன்றையதினம் பேராசிரியரின் உருவப்படமும் திரைநீக்கம்செய்யப்படும்

## 6ஆவது மாத நினைவஞ்சலி



**அமரர் சிவபாக்கியம் இராசதுரை**
மலர்வு: 16-11-1938
உதிர்வு: 28 10-1987

அன்பின் திருவுருவாய் அறிவின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய், பாசத்தின் நிறைகுடமாய்த் திகழ்ந்து எங்களின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்த எங்களின் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து 6 மாதங்கள் ஆகிவிட்டாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றுமே பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(1954)

## மரண அறிவித்தலும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



**குமாரசாமி அழகநாயகி அம்மாள்**

குமாரசாமி - அழகநாயகி அம்மாள் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. கே. குமாரசாமியினுடைய அன்பு மனைவியும், கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிகார பொறியியலாளர், கொழும்பு மாநகர சபை) அடியபாதம் (முன்னாள் கணக்காய்வாளர் திணைக்களம், கொழும்பு), பாலசுப்பிரமணியம் (பிரதம லிகிதர் ரெயில்வே திணைக்களம், திருகோணமலை) கமலநாயகி அம்மாள், திருவிளங்கம், (முன்னாள் மலேரியா கந்தோர்) நவரட்ணராஜா (படவரைஞர் உலாந்தா கந்தோர், இயத்தலாவை) சாந்தகுணநாயகி ஆகியோரது தாயாரும் திலகவதி, பரமேஸ்வரி, ஆனந்தவல்லி, காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி (முன்னாள் வன இலாகா), இராஜேஸ்வரி, நகேஸ்வரி, அருட்பிரகாசம் (முன்னாள் உலாந்தா கந்தோர்) ஆகியோரது அருமை மாமியாரும் ரவீந்திரன் நிர்மலா, ஜெகதீஸ்வரி, மங்களேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரன், சியாமளேஸ்வரி, தனேஸ்வரி, மஞ்சுளேஸ்வரி, பிரேமளேஸ்வரி, மங்களகௌரி, சக்திவேல், கௌசல்யாதேவி, குமாரவேல், சுஜேந்திரகுமாரி, ஞானவேல், மணிமேகலா, சகுந்தலா, வத்சலா, தாரணி ஆகியோரது பாட்டியும் அபிராமி, தர்ஷிகா, சஞ்சுதா, அனுஷா, பொன்னம்பலம், கோபிகா, சுகந்தி, சுதன், கிருபாராஜன், ஞானகலா, மாலதி, சுமதி, வானஜா, தனுஷ்யா, சுகிர்தன், இளமதி, சரவணன், சுதர்சன், காயத்திரி ஆகியோரது பூட்டியுமாவார். 1988 பெப்ரவரி 17 ஆம் திகதி காலை 4 மணிக்கு காலமாகி ஈமக்கிரியைகள் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு நடைபெற்றன.

1988 மார்ச் 17 ஆம் திகதி நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரது அந்தியேட்டிக்கிரியை ''Advocate's Lodge'' வல்வெட்டித்துறையில் நடைபெறும் உற்றார் உறவினர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

''சிவா வாசா''
வல்வெட்டித்துறை.

தகவல் :
C. கந்தசாமி

(1948)

## Wanted Immediately

Application are being called for Medical Officers (M.B.B.S.) in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary negotiable.

Applications close on 01-05-1988.

For further particulars contact:

THE
ACTING MEDICAL SUPERINTENDENT
GREEN MEMORIAL HOSPITAL
MANIPAY.

## அறிவித்தல்

யாழ் மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு முதல் வேலை இழந்தவர்களின் (திரையரங்கு ஊழியர்கள், கடைச் சிப்பந்திகள், கூலி வேலை, மேசன் வேலை, தச்சுவேலை, கடற்றொழில் செய்பவர்கள், மற்றும் அரச, தனியார், கூட்டுத்தாபன ஊழியர்கள்) விபரக் கொத்து சேகரிக்கப்படுகிறது விபரங்களுக்கு கீழ்காணும் முகவரியில் கடிதத் தொடர்புகொள்ளவும்.

செயலாளர்,
சமூக அபிவிருத்திச் சபை,
13, முருகமூர்த்தி லேன்.
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(1934)

## பிரயாண ஒழுங்குகள்

### SAUDI VACANCY

Saudi Leading Hospital Administration, Electrical, Mechanical Facilities And City Cleaning Services Company.

சவூதி அரேபியாவில் மேல் குறிப்பிட்ட கம்பனியில் எங்கள் கொழும்பு தலைமைக் காரியாலயம் இதுவரை 3,000 ஆட்களைப் பலவகையான தொழில்களுக்கு அனுப்பியுள்ளது 80% ஆன ஆட்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1. CLEANERS — GENTS
2. CLEANERS — LADIES
3. PLUMBER
4. ELECTRICIAN
5. DRIVERS
6. A/C MECHANIC
7. SUPERVISOR

### Open Visa:

ஒரு வாரத்தில் தன் பயணம் செய்யலாம்.

1. DRIVERS:- AIRPORT
2. CLEANERS - AIRPORT

### KUWAIT

1. CLEANERS
2. HOUSE MAID
3. HOUSE DRIVER
4. HOUSE BOY

மேற்கொண்ட விபரம் அறிய நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு:-**

அன்பின்நமது நண்பர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்:- நாங்கள் இவ் வருடத்தில் 100 பேருக்கு அதிகமானோரை அனுப்பியுள்ளோம். அவர்கள் விபரம் பத்திரிகையில் பிரசுரிக்கத் தேவையில்லை காரணம் யாழ்ப்பாணத்தின் சகல இடங்களில் இருந்தும் அனுப்பியுள்ளோம். பலரையும் கேட்டால் T V. Travels எப்படிப்பட்டது என்பது தெளிவாகும். எமக்குப் பணம் செய்பவர்கள் பெயரை விளம்பரம் செய்ய விருப்பமில்லை மேலும் எங்களுக்கு இதுவரை பல இடங்களிலும் இருந்து வந்த SUB-AGENCY 1.3 88 இல் இருந்து நிறுத்தியுள்ளோம். ஒரு சில தவறுகள் நடந்த காரணங்களால் தான் நாம் இதை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. பயணம் செல்ல விரும்புவோர் யாவரும் எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சகல விபரத்தையும் அறியவும். முற்பணம் அறவிடப்படமாட்டாது தேவையின்றி ஒருவருக்கும் சிரமம் தரமாட்டோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

இப்படிக்கு,
நிர்வாகஸ்தர்
T.V. Travels.

**T. V. Travels & Tourist**
**Brown Road, Kokuvil.**
(Front of Kokuvil Railway Station)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசின்

# தேர்தல் ஒத்திவைப்பு முயற்சி அனுமதிக்க முடியாதது

## எதிர்வரும் ஆண்டுகள் நெருக்கடியானவை என்கிறார் ஈ.பி ஆர்.எல்.எவ். கேதீஸ்வரன்

**சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந.வித்தியாதரன்**

பயங்கரவாத நடவடிக்கைகளைக் காரணம் காட்டி ஸ்ரீலங்கா அரசாங்கம் பொதுத் தேர்தலையும், உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களையும் ஒத்திவைக்க முயல்கிறது. இதை அனுமதிக்கக்கூடாது.

வரும் ஆண்டுகளில் இலங்கை முழுவதிலும் அரச, தனியார் பயங்கரவாதச் சம்பவங்களும் அரசியல் படுகொலைகளும் தொடர்ந்து நிலவத்தான் போகின்றன. அதற்காகத் தேர்தல்களைத் தள்ளிப்போடக் கூடாது.

ஒரு வழியில் அந்தச் சம்பவங்களை முடிந்தளவு கட்டுப்படுத்திக் கொண்டு மற்றொரு வழியில் ஜனநாயக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

ஈ பி. ஆர் எல். எவ். இயக்கத்தின் முன்னணிப் பிரமுகர் திரு. எல் கேதீஸ்வரன் சென்னையில் வைத்து உதயன் செய்தியாளருக்கு அளித்த விசேட பேட்டியில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வழியிலேயோ எந்த ஒரு தீர்வு காணப்பட்டாலும் வரும் ஆண்டுகளில் இலங்கையில் அரச, தனிநபர் பயங்கரவாதம் தொடர்ந்து நடக்கத்தான் போகின்றது. அதைக் காரணங் காட்டி தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது.

பதவியில் இருக்கும் ஐ தே. க. அரசு தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பயங்கரவாத சம்பவங்களைத் தூண்டிவிட்டு, அதைக் காரணங்காட்டி தேர்தல்களைத் தள்ளிப் போடுகின்றது.

இதன் மூலம் உலக அரங்கில் தன்னை நல்ல பிள்ளையாகக் காட்டிக் கொள்ள முயல்கிறது.

இந்த வகையில்தான் மாகாணசபைத்தேர்தல்களுக்கான அறிவிப்பையும் ஜே ஆர். அரசு விடுக்கது உடனே ''தேர்தல் நடத்த இது காலம் அல்ல; ஆகவே அதனை ஒத்தி வையுங்கள்'' என்று எதிர்க்கட்சிகள் கோரின. இப்போது எதிர்க்கட்சிகள் கோரியதால் தேர்தல்களை ஒத்தி வைத்தோம் என்று காரணம் காட்ட முயல்கிறது இலங்கை அரசு.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் இலங்கை அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமாயின் அது முதலில் இந்திய - இலங்கை ஒப்பந்தப் பிரகாரம் தேர்தலுக்கு நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகளை செயற்படுத்தியிருக்க வேண்டும்.

இதே வகையில் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க இலங்கை அரசு முயலும். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. பயங்கரவாதச் சம்பவங்கள் இடம்பெற்றாலும் தேர்தலை எப்படியும் நடத்தச் செய்ய வேண்டும்.

### ஜனநாயக ரீதியான செயற்பாடுகள்

இலங்கை - இந்திய ஒப்பந்தப் பிரகாரம் எமது நாட்டில் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளில் எமது ஈ பி. ஆர். எல் எவ். ஈடுபட்டிருக்கிறது.

தேசிய ரீதியில் எமது கொள்கையுடன் இணைந்து போகக்கூடிய இடதுசாரி அமைப்புகளுடன் ஒரு அணியில் இயங்கும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

தமிழ்ப் பிரதேசங்களிலும் இத்தகைய முறையில் ஒரு செயற்பாட்டுத் திட்டத்தை அமைத்திருக்கிறோம். தமிழ்ப் பிரதேசத்தில் இயங்கும் எல்லா ஜனநாயகக் கட்சிகள், அமைப்புகளுடனும் கைகோர்த்துச் செயற்படுவதில் முன்னிற்போம்.

### புலிகளுடன்

தமிழீழ விடுதலைப் புலிகள்கூட, எமது அமைப்பு உட்பட ஏனைய ஜனநாயக அமைப்புகளின் ஜனநாயக ரீதியிலான உரிமைகளை அங்கீகரித்தால் நாம் அதனுடன் சேர்ந்து ஒரே அணியில் இயங்கத் தயார்.

அதே வேளையில் நாம் ஜனநாயக வழியில் செல்வதை பலவீனமாக எடுத்துக் கொண்டு எம் மீது எவராவது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட முயன்றால் அதை எதிர்த்து பதில் நடவடிக்கை எடுக்கவும் நாம் தயங்க மாட்டோம்.

கேள்வி: தமிழ் ஈழம் என்ற கோரிக்கை குறித்து...?

கேதீஸ்: நாம் எப்போதும் தமிழ் ஈழத்தைக் கோரவில்லை தனி சோஷலிச அரசமைப்பது பற்றித்தான் கூறினோம்.

கேள்வி: அத்தகைய தனி சோஷலிசம் என்ற கோரிக்கையை ஈ. பி, ஆர் எல், எவ் கைவிட்டு விட்டதா?

கேதீஸ்: இந்த விடயம் குறித்து இப்போது பகிரங்கமாகப் பேச முடியாது அதனை அப்படியே விட்டுவைப்போம்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழு அளவிலும், பக்கச் சார்பின்றியும் அமுல் செய்யப்பட வேண்டும் என்பதே எமது தற்போதைய கோரிக்கை. ஒப்பந்தம்கைச் சாத்தாகி5 மாதங்களுக்கு மேல கிவிட்டது.

ஆனால் ஒப்பந்தத்தில் தமிழருக்குச் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் அம்சங்கள் ஏதும் இதுவரை செயற்படுத்தப் படவில்லை.

ஒப்பந்தப்பிரகாரம் அமைதியும், சமாதானமும் ஏற்படும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் பலன் ஏதும் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இதனை உணர்ந்து, மக்கள் எண்ணத்துக்கு மதிப்பளித்துச்செயற்பட வேண்டும்.

இப்படி அவர் சொன்னார். (இ-உ)

தேர்தல் கூட்டுக்காக

# எவரிடமும் நாம் பிச்சை கேட்க மாட்டோம்

## மதுரைக் கூட்டத்தில் வீரப்பன் பேச்சு

மதுரை, மார்ச் 15

நாங்கள் (ஜானகி அணியினர்) கபோதிகள் அல்லர். தேர்தல் கூட்டுக்காக யாரிடமும் நாங்கள் பிச்சை கேட்கமாட்டோம்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் முன்னாள் மந்திரி வீரப்பன் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது;

ஒரு அம்மையார் ஜெயலலிதாவை ஏன் அழைத்து வரவில்லை என்று கேட்டார்கள்.

பாத்திரங்களுக்கு ஏற்ற நடிகைகளைத் தேர்வு செய்ததால் அவரை அழைத்து வரவில்லை என்றார், புரட்சித் தலைவர்.

பின்னர் ஜெயலலிதா இங்கு ஒரு கருத்தும் தமிழ் நாட்டில் ஒரு கருத்தும் கூறி இருக்கிறாரே என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு புரட்சித் தலைவர் என்ன (சிவாஜியை) இழந்து முளியாக நிற்கிறது காங்கிரஸ் இனி என்றும் பொட்டு இழந்த வாழாவெட்டியாகத் தான் இருக்கும்.

காங்கிரஸ்காரர்களுக்கு இப்போது மட்டும் ஆசை வரவில்லை. 84 இலேயே ஆட்சி அமைக்கும் ஆசை வந்து, புரட்சித் தலைவர் அமெரிக்காவில் இருந்த போதே இங்குள்ள துரோகிகள் இடைக்கால அரசு அமையுங்கள். எங்களுக்கு 60 பேர் ஆதரவு உள்ளது என்று பட்டியல் கொடுத்தனர். ஆனால் நாங்கள் அதை முறியடித்தோம்.

இப்போது ஆர்ப்பாட்டம் போடும் அலங்காரவல்லி 84 ஆம் ஆண்டின் போது புரட்சித் தலைவருக்கு சுய சிந்தனை இல்லை பேச முடியாத ஒரு கூட்டம் தான் ஆட்சியை நடத்துகிறது என்றெல்லாம் கூறினார்.

அப்போது எங்களிடம் இருந்த நாவலர், பண்ருட்டியை எல்லாம் குற்றம் சுமத்தினார்கள். அவர்கள் கூட இன்று, அங்கு நான் உள்ளேன் பெப்ரவரி 4 ஆம் தேதி சையை உயர்த்திய பம புரட்சித் தலைவர் அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு தான் ஆட்சி அமைக்கும் ஆசை அவர்களுக்கு அடங்கியது. அவர் மறைவுக்குப் பிறகு துரோகம் செய்யத் திட்டமிட்டனர்.

### உங்களுக்கு ஆற்றல் உண்டா?

ஆனால் நாங்கள் புரட்சித் தலைவரின் ஆற்றல் மிக்க சக்தியாக ஜானகி அம்மாளை நிறுத்தினோம்.

உரிமை உள்ள நாங்களே கூட எங்களுக்கு எந்த சக்தியும் இல்லை அதனால் தான் ஜானகி அம்மாளை புரட்சித் தலைவருக்கு பதில் கொண்டு வருகிறோம் என்று கூறினோம். அப்படி இருக்கும் போது நயவஞ்சக நாரிமணிகளுக்கு ஆற்றல் இருக்குமா?

### நிறைகுடம் தழும்பாது

ஜானகி அம்மாளுக்கு ஆதரவு உள்ளதா என்கிறார்கள். ஜானகி அம்மாளை பார்க்க வந்தவர்களில் 200 பெண்கள் அழுகதைப் பார்த்த பத்திரிகையாளர் ஒருவர் நீங்கள் வென்று விட்டீர்கள். உங்களுக்குத்தான் மக்கள் ஆதரவு என்றார்.

ஆனாலும் ஜானகி அம்மாள் அமைதியாக இருக்கிறார். அவரிடம் திறமை உள்ளது. நிறைகுடம் என்றும் தழும்பாது.

கண்ணீருக்குத்தான் நாட்டில் மதிப்பே தவிர டவுடர் மேக்கப்புக்கு அல்ல, பணபலத்திற்கும் அல்ல.

### யாருடன் கூட்டு

இன்று அ. தி. மு. க. யாருடன் கூட்டு சேரப் போகிறது என்று கேட்கிறார்கள் ... பிரச்சினை ...

(4 ஆம்பக்கம் பார்க்க

# தமிழகத்திலிருந்து

(ஜெயலலிதா) 1984-இல் தேர்தலில் இந்திரா அனுதாப அலையால் தான் அ. தி. மு. க. வெற்றி பெற்றது என்று பேசி இருக்கிறார்.

அந்த அம்மையார் எப்படிப்பட்டவர் என்பதை 70 ஆம் ஆண்டிலேயே புரட்சித் தலைவர் அடையாளம் காட்டி விட்டார்.

அப்போது உலகம் சுற்றும் வாலிபன் படம் எடுக்க சிங்கப்பூர் போய் இருந்தோம். அங்குபுரட்சித்தலைவரைச் சந்தித்த பத்திரிகையாளர்கள் சொன்னார் தெரியுமா?

ஜெயலலிதா ஒரு பச்சோந்தி. இடத்திற்குத் தகுந்தபடி நிறத்தை மாற்றிக் கொள்பவர் என்று புரட்சித் தலைவர் கூறினார்.

இப்போது கூட அவர் [ஜெயலலிதா] நிறம் மாறிப் பேசுகிறார். ஒரு வேளை காட்டிக் கொடுத்த துரோகத்திற்காக டில்லியிடம் பரிசு பெறுவதற்காக இந்திரா அலையால் அ.தி.மு.க. வென்றது என்று கூறி இருக்கலாம்.

இன்று திலகத்தை ...




நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு


நிதித்துறையில் உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

★ குறைந்த வைப்புத் தொகை 1000|-
★ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000|-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
★ பணமாக ★ காசோலையாக ★ வங்கிக் கணக்கூடாக

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
★ வி. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
★ ஆர். பாலசுப்பிரமணியம்
★ ஓ. சி. எம் ஹசன்பாரி, B.A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61 நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ் முகவர்,- 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பேடன் பவல் நினைவு தினப் போட்டிகள்

சுன்னாகம், மார்ச். 16
காங்கேசன்துறை உப மாவட்டப் பிரிவில் மானிப்பாய் தேர்தல் தொகுதிக்கான பேடன் பவல் நினைவு தினப் போட்டிகள் இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் உதவி மாவட்ட ஆணையாளர் திரு இ. ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றன.

கனிஷ்ட சாரணர் பிரிவில் பேச்சுப் போட்டியில் இணுவில் சைவப் பிரகாச வித்தியாலயம் முதலாம் இடத்தையும் மானிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தையும் சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

குருளைச் சாரணர் பிரிவு பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, கோலாட்டப் போட்டி மூன்றிலும் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முதலம் இடத்தைப் பெற்றது.

சிறு தோழியர் பிரிவு பாட்டுப் போட்டியில் இராமநாதன் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றது.

வழிகாட்டிப் பிரிவு பேச்சுப் போட்டியிலும் நாடகப் போட்டியிலும் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றது. (இ 27)

## இயக்கச்சி கனிஷ்ட வித்தியாலய மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16
இயக்கச்சி கனிஷ்ட வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளினால் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

சுமார் 450 மாணவ, மாணவிகள் கல்வி பயிலும் இந்த வித்தியாலயத்தில் தளபாடம் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது.

பாடசாலைக்கென ஒரு மலசல கூடம் தானும் இல்லை.

அத்துடன் கடந்த ஆண்டில் இருந்து ஒரு விஞ்ஞான ஆசிரியர் கூட இப்பாடசாலையில் இல்லை.

இதனால் புதிய பாடத்திட்டத்தின்படி 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு விஞ்ஞான தொடர் மதிப்பீடு செய்ய முடியாமல் உள்ளது.

இந்தக் குறைகளையெல்லாம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துச் சொல்லியும் பலன் கிடைக்காததனால் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர். (இ-7)

## 1,000 குடும்பங்களுக்கு இலவசஉணவுப்பொருள்

வட்டுக்கோட்டை, மார்ச் 16
வலிகாமம் மேற்கில் அரசாங்க உதவிப் பணம் பெறும் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வந்த உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

15 கிராம சேவையாளர் பிரிவைக்கொண்ட வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 13 தபாற் கந்தோர்களில் அரசாங்க உதவிப் பணம் பெற்றுவந்த கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இப்பிரிவிலுள்ள சங்கக் கடை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 7 கிளைகளில் வைத்து இந்த இலவச உணவுப் பொருள்கள் கிராம சேவையாளர்களினால் வழங்கப்பட்டன.

ஒரு குடும்பத்திற்கு 2 லீற்றர் தாவர எண்ணை 4 இறாத்தல் மா பைக்கெட், 1/2 கிலோ பால்மா, 1/2 கிலோ மரக்கறி சூப் முதலான உணவுப் பொருள்களே இவர்களுக்கு வழங்கப்பட்டன.


### பிரயாண ஒழுங்குகள்

#### ✯ சவூதி அரேபியா

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபர்ஸ் | 25-40 |

#### ✯ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)
இருபாலாரும் 18-35 வரை (தமிழ் முஸ்லிம்) 20-3-1988 க்கு முன் 5 படம் பஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

#### ✯ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17 இலிருந்து 45 வரை
சலரி K.T. 70 டினர்.
2 மணித்தியாலம் மேலதிக வேலை
3 வருட ஒப்பந்தம்
சாப்பாடு தங்குமிடம், வைத்திய வசதி எல்லாம் இலவசம்.
மேலதிக விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி**
666, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)


★ மக்கள் வங்கி பணப் புழக்கம்

# ஏனைய கிளைகளுக்கும் விரைவில் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
மக்கள் வங்கியின் சுன்னாகம், காங்கேசன்துறை, சாவகச்சேரிக் கிளைகளிலும் விரைவில் பணப் புழக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

மக்கள் வங்கி யாழ் பிரதேச முகாமையாளர் திரு எம் கணேசசுந்தரம் உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளை, ஸ்ரான்லி வீதிக்கிளை ஆகியவற்றில் ஏற்கனவே பணப்புழக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

மேற்குறிக்கப்பட்ட கிளைகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும்போது ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பலன் அடைவார்கள் என்றும் முகாமையாளர் தெரிவித்தார். (இ-5)

## கைதடி சைவச்சிறுவர் இல்லத்துக்கு உதவுக
### கொடித்தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 16
இப்போது பணக்காரர், ஏழைகள் என்ற பேதம் கிடையாது எல்லோரும் அனைதைகளே. சேவை செய்ய சிலருக்கு மனமிருந்த போதிலும் சந்தர்ப்பம் இல்லை. அனால் பலருக்கு சேவை செய்ய சந்தர்ப்பம் இருந்த போதிலும் மனமில்லை. எனவே எல்லா மக்களும் பொதுஸ்தாபனங்களுக்கு சகல விதமான உதவிகளையும் செய்ய முன்வர வேண்டும்.

கைதடி சைவச் சிறுவர் இல்ல கொடி தின விழாவில் பண்டிதர் குகவைரனர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

விழாவுக்கு யாழ். இந்து இளைஞர் பேரவையின் முன்னாள் செயலாளரும் நல்லை ஆதீன சுவாமிகளின் செயலாளருமான திரு சுவாமிநாதன் தலைமை வகித்தார்.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற இந்த விழாவில் மேற்படி இல்ல புரவலர் தம்பு விஸ்வப்பா அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவை முன்னிட்டு 'பிரார்த்தனைப் பாடல்கள்' நூலொன்றும் வெளியிடப்பட்டது. (இ-9)

### உதவித்தொழில் ஆணையாளர்

கரவெட்டி, மார்ச் 16
வவுனியா தொழிற்திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் திரு. கே. சிவப்பிரகாசம் யாழ் மாவட்ட உதவித் தொழில் ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். (இ 70)

### பாலைதீவு உற்சவமும் இல்லை

குருநகர், மார்ச் 16
பாலைதீவு அர்ச்: அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இவ்வருடமும் நடைபெறமாட்டாது.

கடல் வலயப் பாதுகாப்புச் சட்டம், நாட்டு நிலைமை ஆகிய காரணங்களால் கடந்த மூன்றுண்டுகளாக பாலைதீவு, அர்ச்: அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவங்கள் நடைபெறவில்லை.

கச்சதீவு வருடாந்த உற்சவமும்நடைபெறாது. (இ-51)

### இடம் மாற்றம்

கரவெட்டி மார்ச் 16
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. கே பாலச்சந்திரன் கொழும்பு பிரதம நீதிமன்றின் நீதிபதியாகப் பதவி உயர்வுடன் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார் (இ-70)

### எவரிடமும்- - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)
திகள் அல்லர் கையேந்தும் நிலையில் எங்களை புரட்சித் தலைவர் விட்டுச் செல்லவில்லை

நாங்கள் யாருடன் கூட்டு சேரப்போகிறோம் என்பது பிரச்சினை இல்லை எங்களோடு யார் கூட்டு சேர வருகிறார்கள் என்பது தான் பிரச்சினை தேர்தல்நேரத்தில் யாரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஜானகி அம்மாள் முடிவு செய்வார்.

77-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் கூறினர்; தமிழகத்தில் அமைக்கிற ஆட்சி அ. தி மு க. ஆட்சி தான் என்று.

1980-ஆம் ஆண்டும் அமைகிற ஆட்சி அ தி மு க. தான் என்றார். 84-ஆம் ஆண்டு நம்மை அப்படி கூறவைத்தார். இனி வரும் தேர்தலில் கூட நயவஞ்சகம் தோற்கும். சேர்ந்து நின்றாலும் அமையப்போவது அ தி மு. க. ஆட்சி தான். அ. தி மு. க. என்றால் ஜானகி அம்மாள் தலைமையிலான அ தி மு க.

இவ்வாறு வீரப்பன் பேசினர். (இ-உ)

## மன்னர் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம் மார்ச் 16
இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் தமது சொந்தச் செலவில் மன்னார் திரும்பிய 1500 அகதிக் குடும்பங்களுக்கு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கம் நிவாரண உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இந்த அகதிகளுக்கு இதுவரைஎந்த விதமான அரச உதவிகளும் வழங்கப்படாததாலேயேமேற்படி சங்கம் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது

இதன்படி உதவிகளை சங்கத்தின் செயலாளர் திரு சின்கிளேயர் பீற்றருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

மேலும் இச் சங்கமானது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சுழற்சி முறையிலான உதவித் திட்டமொன்றையும், பெற்றோரை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு சீருடை மற்றும் பாடசாலை உபகரண உதவிகளையும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் நாடு திரும்பும் அகதிகளுக்கு ஐ. கியநாடுகள் அகதிகள் தூதுவராலயம்' மூலமான உதவிகளையும் மேற் கொண்டு வருகின்றது. (இ-9)


### அறிவித்தல்

**சீ—நோர் அபிவிருத்தி நிறுவனம்**
காரைநகர்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், மீன்பிடி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற எமது வள்ளச்சாலை மீண்டும் படகு கட்டும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

மானிய அடிப்படையில் 17½', 8' (3½ தொன்) மற்றும் இதர வள்ளங்களை மீனவருக்கு உற்பத்தி செய்து வழங்குவதற்கு எமது நிறுவனம் மட்டுமே இன்று வடபகுதியில் இயங்கி வருகின்றது.

இப் படகுகளின் தொழில் நுட்பமும், தரமும் மீன்பிடி அமைச்சின் சிபார்சுக்கு அமைவாக உள்ளது. அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களைக் கொண்டு வாடிக்கையாளரின் தேவைக்கமைய வள்ளங்கள் விரைவில் அமைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

ஐம்பது (50%) வீத முற்பணம் செலுத்தி படகு உற்பத்திக்கான ஓடர் கொடுப்பவர்களுக்கு இரண்டு வாரத்துக்குள் வள்ளம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

(1) பிரதிப் பொது முகாமையாளர்
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
குருநகர்.

(2) உற்பத்தி முகாமையாளர்,
சீ—நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

நன்றி

பிரதிப் பொது முகாமையாளர்


## வெகுஜனஇயக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்16
அன்னை அன்னம்மா டேவிட்டின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு இந்திய அரசு கூடிய விரைவில் சமாதானத்தை நிலைநாட்ட-சமரசத் தீர்வை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் மேற்கொண்டுவரும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் அறிக்கையில் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)




### அன்னை இந்திரா சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
இருபாலை அன்னை இந்திரா சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு ஆண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. தர்மகுலசிங்கம், தலைவர்: திரு. க. அருளானந்தம், உபதலைவர்: திரு. க. ஜெயராசசிங்கம், செயலாளர்; திரு. இ ஜெகதீஸ், பொருளாளர்: திரு. வை. வன்னியசிங்கம்.

மற்றும் திரு. க. இரத்தினராஜசிங்கம், திரு. சு லோகாராசா, செல்வி செ ஹேமலதா, செல்வி ந. பவானி, திருமதி இ நிர்மலா ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

### ★செய்திக் கொத்து★

#### மக்பூல் மறைவுக்கு அனுதாபம்

அம்பாறை, மார்ச் 16
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூலின் மறைவுக்கு அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை அனுதாபத் தீர்மானம் ஒன்றை அண்மையில் நிறைவேற்றியது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் 1988ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்தக் கூட்டம் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். ஜௌபர் தலைமையில் அம்பாறை கச்சேரி மண்டபத்தில் நடைபெற்றது. (இ-41)

#### கைப்பணியாளர் பென்ஷன் திட்டம்

கொழும்பு, மார்ச் 16
கைப்பணியாளர்களுக்கும் பென்ஷன் மற்றும் சமூகப்பாதுகாப்பு வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவதுபற்றி கொள்கையளவில் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

இதுசம்பந்தமான யோசனையை அமைச்சர் தொண்டமான், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்

இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. (இ-எ)

#### பேடன்பவல் பிறந்ததின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16
சாரணர் இயக்கத் தந்தையும் ஸ்தாபகருமாகிய இல்லெவல் பேடன் பவலின் 131ஆவது பிறந்ததினவிழா யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது

கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் கொடியினை ஏற்றிவைத்தார்

குழுத் தலைவர் செல்வன் கே கலாவண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

குழுச்சாரணத் தலைவர் திரு ஜி கே சபாநாதன் கல்லூரி அதிபர் திரு.வி. பாலசுந்தரம், உதவி மாவட்ட ஆணையாளரும் எமது குழுவின் ஆலோசகருமாகிய திரு. என். சாம்பசிவம் குருளைச் சாரண ஆசிரியர் திரு. என். தியாகராசா சாரணத் தலைவர் திரு. சு மயில்வாகனம், குழுப் பயிற்சியாளர் செல்வன் ஏ நவரட்ணராஜா ஆகியோர உரைநிகழ்த்தினர். (இ)

#### கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 16
அறவழி இணைப்புக் கிராமங்களின் பிரதிநிதிகளுக்கான முழு நாள் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும்.

அறவழிப் போராட்டக்குழு இந்த கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது

மேற்படி கருத்தரங்கு அறவழி வாழ்வு நிலையம், சண்டிவீதி. நுணுவில், கைதடி என்னும் முகவரியில் நடைபெறும். (இ-31)

#### சாரணர் பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சாரணத் தலைவர்களுக்கான பயிற்சிப் பாசறை இம்மாதம் 19ம் 20ம் திகதிகளில் யாழ் கனகரட்ணம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்) திரு டோறன்ஸ் இராசசிங்கம் மேற்கொண்டு வருகின்றார்.

பயிற்சிகளுக்கு திரு நா. நல்லையா பொறுப்பாக இருப்பார். (இ-ஜே)


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★குவைத்
★ பஹாரின் ★ அபுதாபி
★ சிங்கப்பூர்

**குவைத்:**

| | | |
|---|---|---|
| 1. | பொலீஸ் நிலைய கிளீனேர்ஸ் | சம்பளம் — 35 டினர் |
| 2. | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | சம்பளம் — 35 டினர் |

**சவூதி அரேபியா**

| | | |
|---|---|---|
| 1. | ஆஸ்பத்தரி கிளீனேர்ஸ் | சம்பளம் — 450 றியால் |
| 2. | எயர் போட் ரோலர் | சம்பளம் — 450 றியால் |
| 3. | L. V. சாரதி | சம்பளம் — 650 றியால் |
| 4. | H. V. சாரதி | சம்பளம் — 750 றியால் |
| 5. | சமையல்காரர் | சம்பளம் — 650 றியால் |

முக்கிய குறிப்பு :- முற்பணம் அறவிடப்படமாட்டாது. செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை மணி 8-30 முதல் மாலை 4-30 வரை நிலையம் திறந்திருக்கும்.
ஏமாற்றத்தைத் தவிர்த்து நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும்.
சுன்னாகம் கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்.

மேற்குறிப்பிடட நாடுகளுக்கு பணிப் பெண்களும் அனுப்பிவைக்கப்படுவர்.

தொடர்பு:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உங்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்பது முக்கியம் அல்ல. நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள் என்பதே முக்கியம்.

— மில்டன்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
16.03.1988 தந்தி: 23


## அங்கவீனர் திறமைகள்

விழிப்புலனற்றோரின் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக் கொணரப்பட வேண்டும். அதற்கான ஏற்பாட்டுகளை சமூகத்தில் உள்ளவர்கள் பொறுப்புடன் செய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழிப்புலனற்றோருக்குக் கைக்கடிகாரங்கள் வழங்கும் வைபவத்தில் கருத்துக் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விழிப்புலனற்றோர் மட்டுமன்றி அங்கவீனர்கள் எல்லோரையும் சமூக நீரோட்டத்தில் சேர்த்து அவர்கள் குறையின்றி வாழ வழி செய்தல் அவசியம். இதனை இப்பத்தியில் முன்னர் பல தடவைகள் வலியுறுத்திக் கூறி வந்தோம்.

தாம் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு பிரிவினர் என்று அங்கவீனர்கள் உணராத விதத்தில், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுதல் வேண்டும். அவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளைக் கண்டறிந்து, அவற்றை வெளிக்கொணர்வதால், அவர்கள் தாழ்வு மனப்பான்மை இன்றி பொதுவான சமூக நீரோட்டத்தில் சேர்ந்து வாழ்வதற்கு வழி உண்டாகும்.

அவயவக் குறைவின்றி வாழும் பாக்கியம் பெற்றவர்கள் இதில் அக்கறை காட்டி, சேவை மனப்பான்மையுடன் சில தொண்டுகளைச் செய்தாலே அங்கவீனர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும்.

சாதாரண மனிதராக இருக்கும் ஒருவர் அங்கவீனராக மாறுவது என்பது ஒன்றும் புதிதல்ல. இப்போதைய காலகட்டத்தில், சூழ்நிலையில் அதிக நாள் தேவை என்பதும் அல்ல. வீதியால் ஓரமாகச் சென்றாலும் வேகமாக ஓடி வரும் வாகனம் வந்து மோதுவதால் ஒருவர் சில நிமிட வித்தியாசத்தில் அங்கவீனராகும் அபாயம் உள்ள காலம் இது.

எனவே அங்கவீனர்களாக, புலன் இழந்தவர்களாக உள்ளவர்களது நிலை எங்களுக்கும் ஏற்பட்டால் எப்படியிருக்கும் என்று ஒவ்வொருவரும் நினைத்தால் அவர்களது மறுவாழ்வுக்கு உதவ வேண்டும் என்னும் இரக்க சுபாவம் மனப் பக்குவம் தானாகவே பிறந்து விடும்.

மற்றவர் மீது கருணை காட்டி, அவர்களின் வாழ்க்கை வளத்துக்கு உதவுவது கடவுளுக்குச் செய்யும் தொண்டுக்குச் சமமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த வைபவத்தில் உரையாற்றியவர்களில் ஒருவர், விழிப்புலன் இழந்தோர் ஆரம்பக் கல்வி பெறுவதற்கு மட்டுமே வடபகுதியில் வாய்ப்பு உண்டென்றும்—

அவர்களுக்கான சிரேஷ்ட பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் — வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

இது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வெளிநாடுகளில் விழிப்புலன் இழந்தோரும் மட்டுமன்றி ஏனைய புலன்களை இழந்தோர், அங்கவீனர்கள் சாதாரண மனிதர்கள் போலக் கல்வி பெறவும் தொழில் வாய்ப்புப் பெறவும் வசதிகள் உள்ளன. அவற்றுக்கு நிகராக இங்கு செய்யமுடியாவிடினும், அடிப்படை மட்டத்திலாவது அங்கவீனர்களுக்கு, கல்வி, தொழில் வாய்ப்புகள் செய்யப்படுவது அவசியம்.

இவற்றுக்கு அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்கக் கூடாது. பொது நல இயக்கங்கள் கொடை வள்ளல்கள் ஆகியோர் சேர்ந்து ஆக்க பூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு அங்கவீனருக்கு உதவுதல் வேண்டும்.

## சீசன் டிக்கெட் விரைவில் வரும்

வட பிராந்திய போக்குவரத்து சபையினால் விநியோகிக்கப்படும் சீசன் டிக்கெட்டுகள் அடுத்த வாரம் அளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த சீசன் டிக்கெட்டுகள் அசம்பாவிதங்கள் காரணமாக பழுதடைந்து விட்டதால் புதிய டிக்கெட்டுகள் அச்சிடப்படுகின்றன.

யாழ்ப்பாண டிப்போ மட்டும் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு சீசன் டிக்கெட் வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)



பொய்யாமொழி

குறள்:
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

பொருள்:
காலம் நீடித்தல், மறதி, சோம்பல், அளவு மீறிய தூக்கம் ஆகிய இந்நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

இந்தியாவில் வேலைநிறுத்தம்

# மேற்கு வங்காளம் கேரளா, பஞ்சாப் பாதிக்கப்பட்டன

புதுடில்லி, மார்ச் 15

பிரதமர் ராஜீவ் காந்தியைப் பதவி விலகக் கோரி நடத்தப்பட்ட ஒரு நாள் பொதுவேலை நிறுத்தம் மேற்கு வங்காளம், கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக பி.பி.சி. வானொலி அறிவிக்கிறது.

கம்யூனிஸ்ட் ஆட்சியின்கீழ் உள்ள மேற்கு வங்காளத் தலைநகரான கல்கத்தா செயலிழந்து காணப்பட்டது.

வீதிகளில் வாகன ஓட்டம் காணப்படவில்லை.

மத்திய அரசுக்குச் சொந்தமான கல்கத்தா டெலிவிஷன் நிலையத்தின் மீது கம்யூனிஸ்ட் ஆதரவாளர் தாக்குதல் நடத்தினர்.

நகரின் இன்னொரு இடத்தில் வேலைக்குச் சென்ற ஊழியர்களும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் மோதிக்கொண்டனர்.

கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் பொதுவேலை நிறுத்தம் பூரணமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் ரயில்பாதைமீது கம்யூனிஸ்ட் தொண்டர்கள் அமர்ந்து ரயில்சேவையை ஸ்தம்பிக்கச் செய்தனர்.

வேலைக்குச் சென்ற ஊழியர்கள் தடுக்கப்பட்டனர்.

ஏனைய மாநிலங்கள் இப்போது வேலை நிறுத்தத்தினால் அவ்வளவு பாதிப்பு ஏற்படவில்லை என்று பி.பி.சி மேலும் தெரிவித்தது. (எ)

## பனாமாவில் அரசு ஊழியர் ஆர்ப்பாட்டம்

பனாமா நகரம், மார்ச் 15

அமெரிக்காவின் பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து, பனாமா அரசு, ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றது.

இதனால் ஆத்திரமடைந்த அரசு ஊழியர்கள் செவ்வாய்க்கிழமையன்று அரசு அலுவலகங்கள் முன்னால் குழுமி நின்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க இராணுவத்தினர் கண்ணீர்ப் புகை பாவித்தனர். அமெரிக்காவின் பொருளாதாரத் தடை, பனாமாவில் நிதி நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

பனாமாவின் இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோ பதவி விலகும்வரை பொருளாதாரத் தடை நீடிக்கும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்காவில் உள்ள பனாமியர்களின் சொத்துக்களையும் அமெரிக்க அரசு முடக்கி விட்டது.

ஜெனரல் நொரியாகோ, திரு. டெல்வாலியை ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு நாட்டின் சக்தி மிக்க மனிதராக மாறியிருக்கின்றார் என்பது தெரிந்ததே.

ஆனால் அவர் போதை வஸ்துக் கடத்தலில் சம்பந்தப்பட்டிருப்பதால், தளபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்தி வருகின்றது. [எ]

### வெளி உலகில்

## கோர்ப்பச்சேவ் யூகோ. விஜயம்

மாஸ்கோ, மார்ச் 15

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் ஐந்து நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு பெல்கிரேட் சென்றிருக்கின்றார்.

யூகோஸ்லேவியாவுடனான பொருளாதாரத் தகராறுகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே சோவியத் அதிபரின் விஜயம் அமைகின்றது. (எ)

உலகின்

## இரண்டாவது பெரிய வைரக்கல்!

கிம்பார்லி, மார்ச் 15

உலகிலேயே இரண்டாவது பெரிய வைரக்கல் தென் ஆபிரிக்க வைரச் சுரங்கம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டது.

டிபியர்ஸ் சுரங்கநிறுவனம் இச் செய்தியைத் தனது நூற்றாண்டு விழாவில் அறிவித்தது.

1986இல் இவ் வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் நூற்றாண்டு விழாவில் இதனை அறிவிப்பதற்காக இத்தகவல் மறைக்கப்பட்டு வைக்கப்பட்டதாகவும் நிறுவனத்தலைவர் தோம்ஸன் சொன்னார்.

இவ் வைரக்கல்லுக்கு 'நூற்றாண்டு' என்ற பெயரிடப்பட்டது. 599 காரட் நிறையான இவ் வைரக்கல் எத்தனையோ லட்சம் டாலர் பெறுமதியானது என்று மதிப்பிடப்பட்டது.

முதலாவது பெரிய வைரக்கல் 1905 ஆம் ஆண்டில் பிரிமியர் சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. (எ)

## புஷ்ஷுக்கு வெற்றிவாய்ப்பு!

நியூயோர்க், மார்ச் 15

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இப்பொழுது நடத்தப்படுமானால் குடியரசு வேட்பாளரான ஜோர்ஜ் புஷ் வெற்றியீட்டுவார்.

இப்படி நியூஸ்வீக் சஞ்சிகை நடத்திய கருத்துக் கணக்கெடுப்பில் தெரிய வந்திருக்கின்றது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பஸாது செட்ஸ் கவர்னர் மைக்கல் டுகாக்கிஸ் போட்டியிடுவாரானால் அவரை 49 : 43 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிப்பார் என்று நியூஸ்வீக் சஞ்சிகை மேலும் தெரிவித்தார். (-எ)

## அதிகாரியின் காதைத் தின்ற பொலிஸ் குதிரை!

லண்டன், மார்ச் 15

பொலிஸ் குதிரை தன்னைப் பராமரிக்கும் பொலிஸ் அதிகாரியின் காது ஒன்றைக் கடித்துத் தின்றது.

லண்டன் தென்பகுதியில் பொலிஸ் பண்ணையில் இச்சம்பவம் இடம் பெற்றது. (எ)

## பிரஸ்நேவுக்கு அவமானம்!

மாஸ்கோ, மார்ச் 15

முன்னாள் சோவியத் தலைவர் லியோனிட் பிரஸ்நேவ்வின் பெயர், வானவெளி வீரர் பயிற்சி நிலையத்தில் இருந்து அகற்றப்பட்டது.

1982 இல் திரு. பிரஸ்நேவ் காலமானார். அதைத் தொடர்ந்து, அவரைக் கௌரவிக்கு முகமாக இப் பயிற்சி நிலையத்துக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

இப்போது அவரின் பெயர் அகற்றப்பட்டு விட்டது. இது சம்பந்தமான முடிவு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்தினால் எடுக்கப்பட்டது (எ)

## இஸ்ரவேல் பொலீஸில் இருந்து பலஸ்தீனியர் கூண்டோடு விலகல்

ஜெருசலேம், மார்ச் 15

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக் கரை பகுதிகளில் வாழும் பலஸ்தீனியர்கள் நடத்தும் கிளர்ச்சிக்குப் புதிய பரிமாணம் கொடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் பணி புரிய நிறுத்தப்பட்டிருந்த இஸ்ரவேலியப் பொலீஸ் படையில் இருந்த பலஸ்தீனியர்கள் ராஜினாமாச் செய்து விட்டனர்.

மூன்று மாதங்களாக பலஸ்தீனியர்கள் நடத்தி வரும் கிளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. (எ)

## ராஜதந்திர உறவு இல்லை

ஏதென்ஸ், மார்ச் 15

இஸ்ரவேலுடன் முழு அளவிலான ராஜதந்திர உறவுகளை கிரேக்க அரசு வைக்காது.

இப்படி கிரேக்கப் பிரதமர் அன்ரியாஸ் பாப்பன்ரியூ தெரிவித்தார். (எ)

கைப்பற்றப்பட்ட

## அரபு பிரதேசத்தில் இரவு ஊரடங்கு இஸ்ரவேல அறிவிப்பு

டெல்அவிவ் மார்ச் 15

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக் கரைப் பிரதேசங்களில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இரவு 10 மணி முதல் அதிகாலை 3 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று இஸ்ரவேலிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களுக்கு எரிபொருள் கொண்டு செல்லக் கூடாது என்று ஏற்கனவே இஸ்ரவேல் அரசு உத்தரவிட்டது தெரிந்ததே.

இ னிடையில் இஸ்ரவேல் பிரதமர் ஷமிர் அமெரிக்கா சென்றுள்ளார்.

அமெரிக்காவின் புதிய மத்திய கிழக்கு யோசனை சம்பந்தமாக பேச்சுக்களை நடத்தவே அவர் அங்கு சென்றிருக்கின்றார். புதிய யோசனையை திரு. ஷமிர் நிராகரித்து விட்டார். ஆனால் அதில் மாற்றம் செய்ய முடியாது என்று அமெரிக்கா அறிவித்துவிட்டது.

புதிய யோசனையின் படி கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை இஸ்ரவேல் திருப்பி பலஸ்தீனியருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றது. (எ)

## நெவெடா பாலைவனத்தில் அணு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மெர்குரி, மார்ச் 15

அணு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நெவெடாப் பாலைவனத்தில் நடத்தப்பட்டது.

பாலைவனத்தின் நுழைவாயிலில் சுமார் 5 ஆயிரம் பேர் திரண்டு நின்று அணு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

நெவெடாபாலைவனத்தில் அணுப்பரிசோதனை நடத்தப்படும் இடத்துக்குச் சென்ற சுமார் 1136 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

முதலில் கைது செய்யப்பட்டவர் விஞ்ஞானிகள் றொபர்ட் பிளேக், ரெறிகார், டானியல் எல்ஸ்பேர்க் ஆகியோர் இருந்தனர். (எ)

வடக்கு - கிழக்கில்

# இந்திய அரசின் அனுமதி இன்றி எதுவுமே செய்ய முடியாத நிலை

அம்பாறை, மார்ச் 16

வடக்கு கிழக்கில் இந்திய அரசின் அனுமதி இன்றி எதுவுமே செய்ய முடியாத நிலை இன்று உருவாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை சாகிறாக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஜனாப் எம். சீ. ஆதம்பாவா

### நாட்டு மக்கள் அனைவரும் இதற்குப்பொறுப்பு என்கிறார் மன்சூர்

தலைமையில் நடைபெற்ற இந்தவிழாவில் மாவட்ட அமைச்சர் ஜனாப். மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்நாட்டின் அரசியல்வாதிகள் இனங்களுக்கிடையே இனரீதியான சிந்தனைகளை வளர்த்து விட்டதனால்தான் இன்றைய அவலநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

உலகில் இலங்கைதான் பௌத்தநாடு இது எமக்கே சொந்தமானதுஎன்று சிங்களவர்களும் —

பூர்வீககுடிமக்களாகிய எமக்கு சமஉரிமை வேண்டும் எனத்தமிழர்களும் —

ஆகம் (அலை) காலம் முதல் வாழும் எமது "சவூதி" இலங்கைதான் என முஸ்லிம்களும் நினைக்கிறார்கள்.

இந்த இனரீதியான சிந்தனை கொடுமையானால் நாடு இரண்டாகப் பிரிவதைத் தவிர்க்க முடியாத நிலையே ஏற்படும்.

மற்ற இனங்களை மதித்தும், மதங்களை மதித்தும் நாம் நடக்காத பட்சத்தில் எந்த விமோசனத்தையும் காணமுடியாது.

எமதுமண்ணில் இன்று அந்நிய நாட்டுப் படை நடமாடும் நிலை ஏற்பட்டுள்ளதென்றால் அதற்கு இந்நாட்டு மக்களாகிய நாமேதான் காரணம்.

எம்மிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வுகளும் வளர்ந்திருந்தால் இன்றைய இந்நிலை ஏற்பட்டிருக்காது.

உலகில் மனித உரிமைகளைப் புறக்கணிக்கும் நன்கு நாடுகளுள் இலங்கையும் ஒன்று எனச் சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெட்கக்கேடானதும் கண்ணீர் வடிக்கத்தக்கதுமான இந்த அவப்பெயர் நீங்கவேண்டும். இதற்காக சகல இன மக்களும் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-14)

### கூரைவேலை

கொக்குவில், மார்ச் 16

கடந்த அக்டோபர்-நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது சேதமடைந்திருந்த கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் கூரை வேலைகள் இப்பகுதிப் பொது மக்களின் உதவியுடன் ஆலய வழிபடுவோர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ 69)

சமய சந்நிதிகளில்

### வருடாந்த பொங்கல்

திருநெல்வேலி, மார்ச்16

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற இருக்கின்றது. (இ 143)

### வாசகர் திருமுகம்

## காரைநகர் மேற்கு வீதியின் அவலநிலை

காரைநகர் மேற்கு வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது மோசமான நிலையில் இருந்து வருகிறது.

கடந்த பல வருடங்களாக இவ்வீதியில் எந்தவித பராமரிப்பு வேலைகளும் நடைபெறவில்லை.

மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதைக் காணலாம். வெளியூர் மக்கள் இது குழியோ, அல்லது குளமோ என்று தெரியாமல் அவஸ்தைப்படுகின்றார்கள்.

இந்த வீதியின் அவல நிலை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியும், நேரில் சென்று கூறியும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இப்படி ஒரு வீதி உள்ளது என்று தெரியுமா?

வீதிகளுக்கு மாதந்தோறும் குறிப்பிட்டளவு தார் ஒதுக்கப்படுவது வழமை.

பல வருடங்களாக இந்த வீதிக்கு ஒதுக்கப்பட்ட தாருக்கு என்ன நடந்தது?

அதிகாரிகள் மாதந்தோறும் வீதிகளைப் பார்வையிடவேண்டும் என்ற நியதியுண்டு. அதற்கான படியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆனால் இந்த வீதிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்திருப்பார்களா?

காரைநகரின் 75 சத வீதமான மக்கள் இந்த வீதியைத்தான் உபயோகிக்கின்றனர்.

காரைநகர் டிப்போவின் பெரும்பான்மையான பேருந்துகளும் இந்த வீதியால்தான் செல்லுகின்றன.

இத்தனை அவசியம் வாய்ந்த இந்த வீதியில் ஏதாவது தற்காலிக திருத்த வேலையையாவது மேற்கொள்ள வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

காரைநகர். பா. குகநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
NEW KONICA S R V 100
நிழற்படச் சுருள்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:-
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

16 - 03 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை நிழற்படச்சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



நடராஜா கமலநாதன்
(பொடி, அப்பன், சிவா)

ஈழமண்ணில் 30 - 03 - 1965
ஈழவர் இதயங்களில் 16 - 02 - 1987

ஓ அப்பன்,
எங்கள் இதய தீபமே
எங்கே நீ சென்றாயடா?
இலட்சியப் பழுவைச் சுமந்த
உன் பயணம்
தடைப்பட்டதேன்?
வஞ்சக உலகை வஞ்சித்த
உன் நெஞ்சத்தை
நினைத்துப் பார்க்கின்றோம்!
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க
தொலை தூரம் சென்றது ஏன்?
உன் பிரிவால் வாடும்
உள்ளங்களைப் பாராடா
ஓடிவந்து ஒரு வார்த்தை
கூறாயோ?

உன்பிரிவை எண்ணி ஏங்கும் அன்பு அம்மா, அப்பா, அக்கா அத்தான், ஞானு அக்கா, ராசன் அண்ணா அண்ணி, வாணி, தம்பி, கண்ணன், மாமாமார், குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய் [1962]

### கூட்டம் நடைபெறவில்லை

யாழ்ப்பாணம் மார்ச் 16

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயவென ஒழுங்கு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெறவில்லை. (ஒ 10)

## 2,250 படையினர் தாமாகவே வெளியேறினர்

கடந்த ஆண்டில் இருந்து இதுவரை சுமார் 2,250 பாதுகாப்புப் படையினர் முப்படைகளில் இருந்து தாமாகவே வெளியேறி விட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இப்படி வெளியேறியவர்களில் பெரும்பாலோர் தென் இலங்கை தீவிரவாத இயக்கம் ஒன்றின் அதிரடிப் படையில் சேர்ந்திருக்கின்றனர் என்பதற்கு ஆதாரமிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## 180 ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25 - 12 - 1972
அகால மரணம்: 20 - 10 - 1987

இராசதுரை பிரபாகர்

நீ இல்லாத எமதில்லம் ஒளிதனை இழந்ததய்யா! எம்முடன் கதைத்துச் சிரித்ததெல்லாம் என்றும் எம் காதினுள் கேட்கிறது மகனே! நின் கனிமுகம் காணாது நாள் தோறும் ஏங்கித் தவிக்கின்றோம்.

அம்மா, அக்கா, அம்மம்மா, ஆச்சி, மாமன்மார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, உறவினர், நண்பர்கள்.

ஞானவைரவர் கோயிலடி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

### பலியானோர்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யானவர்கள் காணப்பட்டோரின் பெயர்கள் வருமாறு;

பி. ரத்தினசிங்கம், வயது 44 - திருமலை. ஏ. முத்துக்குமாரன், வயது 78-வவுனியா.

அ துலைஸலாம், வயது 26-ரத்மலை. எஸ். எச். இப்ராஹீம், வயது 30-திருமலை.

சிறிசுருதன், வயது 35-திருமலை. (பஸ் கண்டக்டர்) பி. பாக்கியசோதி, வயது 30-திருமலை.

சே. சத்தியசீலராஜா, வயது 38 - திருகோணமலை. வி. சியாமளா, வயது 28-பலையூற்று.

உயிரிழந்த பன்னிரண்டு பேரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் சிலரின் பெயர்கள் வருமாறு;

எஸ். பதுர்தீன், எஸ். மும்தாஜ், ஏ. சயமோகன், க. சத்யசெல்வராஜ், என். லட்சுமிப்பிள்ளை பிராதபமா, எ. எலியம்மா, ஜி தயாபரன் (ஒ-எ)

### கடைகளை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திருக்க ஏவ்விடயத்தில் ஒத்துழைக்குமாறும் வர்த்தகர்கள் அமைதிப் படையினரால் கேட்கப்பட்டுள்ளனர். (அ-ஐ)

## இன்று பிறந்த நாள்




செல்வி துஷிதா (BABA) சிவகுமாரன் (தும்பளை)
16 03-1988.

தமிழ்ஈழ மண்ணில் தளிர்நடை பயின்று முத்துப் புன்னகை சிந்திட தமது 3ம் வயதினை எட்டிப் பார்த்திடும் S, R, சிவகுமாரன் - சாந்தரூபினி தம்பதிகளின் தங்கத் தமிழ்ச் செல்வி துஷிதாவை கண்ணன் கருணை பெற்றுப் பல்கலையிலும் சிறப்புற்று வாழ அவரை அன்புடன் வாழ்த்தும் அவரின் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, மாமாமார், சித்தி, அண்ணாமார், தம்பிமார், இவர்களுடன் மணிமாமி, குட்டிமாமி, பெரிய மாமி, இராசமாமி, சிவா மாமி, தேனி மாமி, பத்தினி அக்கா, பாப்பா அக்கா, நவம் அண்ணா, ரவிமாமா, மகேந்திரன் மாமா.

தும்பளை
பருத்தித்துறை, (1939)

## 4 ஆவது நினைவு அஞ்சலி!



அமரர் வே. க. இராசசுந்தரம்

தோற்றம்: 25 - 11 - 1905
மறைவு: 31 - 03 - 1984

திதி: சதுர்த்தசி 16-03-1988

எங்கள் குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்து நம்மை நல்வழியிலிட்டு வளம் காண வசதி செய்த அன்புத் தெய்வத்திற்கு எமது இதய பூர்வமான அஞ்சலிகள்.

''செறிடேல்''
சங்கானை

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### காமினி----

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மலையில் உள்ள சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்க இலங்கை இராணுவத்திற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று அமைச்சர் காமினி பிரதமர் காந்திக்கு வேண்டுகோள் விடுப்பார் என்று நம்பப்படுகின்றது.

சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்க தங்களை அனுமதிக்க வேண்டும் என்று இலங்கை இராணுவத்தினர் நெருக்குதல் கொடுக்கத் தொடங்கி உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ராஜீவ் காமினி பேச்சுக்களின்போது பின்வரும் விடயங்கள் ஆராயப்படலாம் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன:-

★ வடக்கு கிழக்கு நிலையுள் மாகாணசபைத் தேர்தலும்.

★ மட்டக்களப்பு அன்னையர் முன்னணி உண்ணாவிரதம்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு சமாதானத்துக்கு வந்து யுத்த நிறுத்தம் செய்தலும் பிறவும்.

★ கிழக்கு மாகாணத்தில் இந்திய அமைதிப் படையின் பணியும் இலங்கை இராணுவத்தின் நிலையும்.

★ திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்து வரும் வன்செயல்கள்

★ தென்னிலங்கையின் கொந்தளிக்கும் சூழ்நிலை.

★ ஒப்பந்தத்தில் சரிவர அமுல் செய்யப்படாத சரத்துக்களை அமுல் செய்தல். [அ-எ]

### யாழ்ப்பாண நகரப் ---

(1ம் பக்கத் தொடர்ச்சி

ளார் பகுதிக்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள நோயாளிகளே வந்திருந்தனர்.

இந்திய அமைதிப்படையினர் வாகனங்களிலும், கால்நடையாகவும் நகரில் தீவிர ரோந்து புரியக் காணப்பட்டனர்

தனியார் போக்குவரத்து வாகனங்கள் ஒரு சில சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும், இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் தாராளமாகச் சேவையில் ஈடுபட்டன.

ஆனால் பிரயாணிகள் குறைந்தளவிலேயே பயணம் செய்தனர்.

படமாளிகைகளில் படக் காட்சிகளும் இடம்பெறவில்லை

கடைகளைத் திறக்கக் கோரி இந்திய அமைதிப் படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

யாழ். நகரில் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஸ்தம்பித நிலை காணப்பட்ட போதிலும் நகருக்கு வெளியே பெரும்பாலான கடைகள் திறக்கப்பட்டிருந்தன (அ-7-9-10)

### சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச்16

இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய வயோதிபர் ஒருவர் மரணமானார்.

கடந்த திங்கட்கிழமை கொக்குவில் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

எம். பொன்னையா (வயது 63) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவராவர். (ஒ-10)

## நீத்தார் பட்டியல்

### திருமதி. தயாபரசுந்தரி ஸ்ரீநடராஜ்

திருமதி. தயாபரசுந்தரி ஸ்ரீநடராஜ் காலமானார். அன்னார் ஸ்ரீநடராஜ் (முகாமையாளர், C. V. BHATT யாழ்ப்பாணம்.) அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா (ஆசிரியை, சென் ஜாசியஸ் மகாவித்தியாலயம், கொட்டாஞ்சேனை), ஸ்ரீகலா (ஆசிரியை, பிரஸ்பிடிரியன் பெண்கள் பாடசாலை மருதானை), கலாராஜ் (தொழில் நுட்பவியலாளர், யாழ். மருத்துவ பீடம்), ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவநாதனின் (விரிவுரையாளர், பொருளியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்) அன்பு மாமியாரும், அபராஜிகனின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன் மாலை 3.00 மணியளவில் உரும்பராயில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பொ ஸ்ரீநடராஜ்
'ராஜ்மகால்'
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். (2059)

## நீத்தார் பட்டியல்

### திரு. இ. கருணாநிதி (BA) அவர்கள்

(வட்டு. திருநாவுக்கரசு ம. வி அதிபர்)
காலமானார்

வட்டுக்கோட்டை சிவன்கோவிலடியைச் சேர்ந்தவரும் வட்டு. இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, நவாலி(?) மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும் யா/வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபரும் வட்டுக்கோட்டை கலைமகள் கலைக் குழுவின் முதல்வரும் சங்கானை ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை உறுப்பினரும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக காப்பாளரும் வட்டு சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழு ஒப்பனையாளரும் வட்டுக்கோட்டை காந்திஜி ச. மு. சங்கத் தலைவருமான திரு. இ. கருணாநிதி பீ. ஏ. அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சந்திரமலரின் அன்புக் கணவருமாவார் அன்னாரின் ஈமச்சடங்கு (16 3-88) புதன்கிழமை இன்று பி. ப. 2 மணியளவில் நடைபெறும் உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

'செல்வரத்தின பதி'
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவியும்,
பிள்ளைகளும்.

### திருமதி சண்முகநாதன் குமுதினி

திருமதி சண்முகநாதன் குமுதினி சிவபதம் அடைந்தார். அன்னார் சண்முகநாதனின் அன்பு மனைவியும், திரு திருமதி பாலசிங்கத்தின் அருமை மகளும், திரு திருமதி குலசேகரம்பிள்ளையின் அன்பு மருமகளும், கிஷோக்குமார் (ஜெர்மனி), உதயகுமார், உதயபாலன், ஜெயபாலன், அமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதிர்காமநாதன் (U.S.A), திருமதி இராஜசிங்கம், பத்மநாதன் (France), ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். ஈமக்கிரியைகள் சுன்னாகம் தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று 16-3-88 பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. சண்முகநாதன்
(கணவன்)
(1958) சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16-03-1988 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. Jaffna on Wednesday, 16th March 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org